1979 மார்ச் 6]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதற்குத் தனியாகக் கேள்வி போடவும். ஏ. பி. பி-2 பதவிக்கு 2 ஆண்டுகள் வழக்கறிஞராக இருக்க வேண்டும். ஏ. பி. பி-2 ஆக பணியாற்றுகின்றவர்கள் சர்வீசின் அடிப்படையில் ஏ. பி. பி.-1 ஆக பதவி உயர்வு பெறுகின்றார்கள்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவைர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டாம் நிலை ஏ. பி. பி. பதவிக்கு வெகு நாட்களுக்கு முன்னால் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அதற்கு காரணம் என்ன?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாம் நிலை ஏ. பி. பி. தேர்வுக்கு ஒரு குழுவை நியமிக்கிறார். அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு அனுப்பும். அந்த வகையில் குழு பரிந்துரையை அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

தனியார் பள்ளிகளில் அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பு.

*வினா எண் 243 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பள்ளிகளிலும் அரிசனங்களுக்கு 18% வேலை வாய்ப்பு கொடுக்க அரசு ஆணையுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம். சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் தவிர, இதர தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியப் பணியிடங்களில் 18 சதவீதம் அரிசனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு ஆணை எண். 1896, கல்வி, நாள் 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ம் நாள் தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டவிதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் அரிசனங்களுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் வழங்குவதில் சிறுபான்மையோர் பள்ளிகள் தவிர என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், யார் அந்த சிறுபான்மையோர் ? என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கு இருக்கக்கூடிய தனியார் பள்ளிகளில் 30, 40 ஆசிரியர்கள் வேலை பார்க்கும் பள்ளிகளில் ஒருவர் அல்லது இருவர் மட்டும்

தான் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கிறார்கள். ஆகவே, இந்த சட்டத்தை கறாராக அமுல்படுத்தவில்லை என்று தெரிகிறது. விகிதாச்சாரப்படி நியமனம் செய்யப்படுவதற்கு இந்தச் சட்டத்தை எல்லா இடங்களிலும் கறாராக அமுல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பணியிலே இருக்கின்ற ஆசிரியர்களை வெளியேற்றிவிட்டு இந்தச் சட்டத்தின்படி ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று அவர்கள் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த உத்திரவு 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ம் நாளிலே தான் போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும்போது இந்த உத்திரவுப்படி செய்யப் படும். சிறுபான்மையோர் யார் என்று கேட்டார்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் போன்றவர்கள் சிறுப்பான்மையோர்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் அரிசன ஆசிரியர்களை நியமிக்கும்போது ஒரு தனியார் பள்ளியில் எத்தனை அரிசன வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமோ அத்தனை இடங்களில் பணிபுரிகின்ற மற்ற ஆசிரியர்களை விடுப்பில் செல்லும்படி செய்துவிட்டு, அந்த இடங்களில் அரிசன ஆசிரியர்களை நியமித்துவிட்டு, பிறகு அவர்களுக்கு வேண்டியவர்களை அந்த இடங்களில் நியமித்துக் கொள்கிறார்கள். ஆகவே, அரசாங்க உத்தரவுப்படி ''லீவ்'' இடங்களில் அரிசன ஆசிரியர்களை நியமிக்காமல் ''பெர்மனன்ட் போஸ்ட்'' களில் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அரசின் எண்ணமும், நாம் போட்டிருக்கிற உத்தரவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அது வெற்றிபெறுவதற்கு வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவகர்ளே, அரசு பள்ளிகளில் குறிப்பாக ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும் கும்போது 18 சதவிகிதம் கடைபிடிக்கப்படாமல் இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் இதைப்போன்று தவறு நடந்திருக்கிறது. ஆகவே, எல்லாப் பள்ளிகளிலும் இந்த 18 சதவிகிதம் என்பதை கண்டிப்பாக கடைபிடிக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசின் உத்தரவு என்பது ஒன்று. அதைச் செயல்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற தவறு என்பது வேறு. அரசு உத்தரவு

1979 மார்ச் 6]

இப்போது இருக்கிறது. ஆசிரியர் நியமனத்திற்கு வேலைவாய்ப் பகங்களிலிருந்து ஆட்களைக் கேட்கும்போது இன்னின்ன வகுப்பி னருக்கு இத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏற்றபடி ஆட்களை அனுப்புங்கள் என்று கேட்டு விகிதாச்சாரப்படி நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கும்போது தவறு ஏற்படு மானால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு உத்தரவு இப்போதே இருக்கிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, 18சதவிகிதம் அரிசனங்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசாங்க உத்தரவு இருந்தும் தவறு நடந்ததாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தவறுக்கு ஒரு தண்டனை என்று நான் எதிர் பார்க்கவில்லை. இருந்தாலும் இழந்த இடங்களை இனி வரு கின்ற இடங்களில் நியமனம் செய்து சரி செய்து கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நிச்சயமாக முயற்சி செய்யும்.

திரு. சு. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளில் ஆசிரியப் பணிகளில் அரிசனர் பகுதி என்று ஒதுக்கப் பட்ட அந்த 18 சதவீதம் பூர்த்தி செய்யாமல் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள தேக்கம்பாடி பள்ளிக்கும், மற்று மொரு பள்ளிக்கும், அரிசனருக்கான அந்த 18 சதவீதம் கொடுக்கப் படாமல் இருக்கிறார்கள். அதனை பூர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பள்ளிகள் என்று வருகிறபோது தனியாக கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. மொத்தமாகப் பார்த்தால் அந்த 18 சதவீதம் இருக்கும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். ஆனால் இதுவரை பேசியது தனியார் பள்ளிகள் சம்பந்தப்பட்டது.

Meetings of Governing Body of Regainal Engincering College Trichi

*Q. No. 244—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state the number of times the Governing body of the Regional Engineering College, Trichi met during each year, 1975-76 and 1977?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருச்சிராப்பள்ளி மண்டலப் பொறியியல் கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு 1975, 1976—ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு தடவை கூடியது. 1977—ல் இரண்டு தடவை கூடியது.